**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.40/2021- PW-2**

| | |
|---|---|
| Name | திரு.சேகர் |
| Husband/Father Name | திரு.கண்ணன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். கனியனூர், மருதமங்கலம் கிராமங்களில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் தனித்தனியாக எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு விஸ்தீரணங்களில் சொத்துகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. எந்தெந்த சொத்து யார் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கிருஷ்ணன் என்பவரின் தந்தை கந்தன் என்பவருக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்து எங்கு எங்கு இருந்தது என்று நான் குறிப்பிட்டு நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். கந்தன் அந்த சொத்துகளை யார்யாருக்கு விற்பனை செய்தார் என்பதையும்,
அவர் இறப்பிற்கு பிறகு என்ன சொத்துகள் இருந்தது என்பதும் அதை அவரது வாரிசுகள் என்ன செய்தார்கள் என்பதும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவரது சொத்துகளில் விவசாயம் செய்து எவ்வளவு வருமானம் வந்தது என்பதும், அந்த வருமானத்தை வைத்து எந்த தேதியில் எந்த சொத்து வாங்கப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வாதிகள் தயார் செய்து கொடுத்த நிரூபண வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டு தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கந்தன் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.